DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 576/2025
Miscellaneous :
Sessions : PW 5
Deposition of Witness for

**1ம் எதிரி ஆஜர் 2 ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | தியாகராஜன் |
| Father / Husband Name | முருகன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **12.03.2026**

**முதல் விசாரணை:**

1.) நான் தற்போது அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்து வருகிறேன். கடந்த 16.08.2025 ம் தேதி காலை 11.45 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் தெய்வராஜன் என்பவரிடம் பூங்கோதை என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று பதிவு செய்து வைத்திருந்த மனு ரசீது எண் 973/2025 ரசீதை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் அந்த புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 207/2025 BNS பிரிவுகள் 296(b) 118(1) 351(3) ) மற்றும் 4 of TNPHW Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த மனு ரசீது அசாஆ 2 புகார் வாக்குமூலம் அசாஆ 3 முதல் தகவல் அறிக்கை அசாஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

2.) பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் விமலா மற்றும் உஷா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகசர் அசாஆ 5 ஆகவும் மாதிரி வரைபடம் அசாஆ 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** அன்றைய தினம் மதியம் 12.45 மணிக்கு எதிரிகள் வாதியை தாக்கிய கட்டையை வாதியின் வீட்டின் அருகே எதிரிகள் விட்டு சென்றதை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கட்டையை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். **அந்த கைப்பற்றுதல் மகசர் அசாஆ 7 ஆகவும் அந்த மரக்கட்டை சபொஆ 1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

3. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை தேடிவந்த நிலையில் 16.08.2025 ம் தேதி மதியம் 1.00 மணிக்கு எதிரியின் வீட்டின் அருகே வேலாயுதம் என்ற எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மற்றொரு எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி பிரியா என்பவர் செங்கல்பட்டு அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. பின்னர் வழக்கில் காயம் பட்ட பூங்கோதை மற்றும் ஞானப்பன்

M.T 12/03/26

விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று வழங்கிய மருத்துவர் கயல்விழி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(அந்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றுகள் அசாஆ 8 மற்றும் அசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(அந்த படிவம் 91 அசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் வழக்கில் காயம் பட்ட பூங்கோதை என்ற நபருக்கு மருத்துவர் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவான BNS பிரிவுகள் 296(b) 118(1) 351(3) ) மற்றும் 4 of TNPHW Act இருந்து BNS பிரிவுகள் 296(b) 118(1) 118(2) 351(3) ) மற்றும் 4 of TNPHW Act ஆக மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் விசாரணை முடித்து எதிரிகள் மீது BNS பிரிவுகள் 296(b) 118(1) 118(2) 351(3) ) மற்றும் 4 of TNPHW Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

4. நான் சம்பவயிடம் நேரடியாக செல்லவில்லை என்றாலும் ஏற்கனவே போடப்பட்டிருந்த புகார் ஏற்பு ரசீதை கொண்டு பொய்யாக இறுதி அறிக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

M. [signature] 13/03/2026.

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

[signature] 12/3/26
Judicial Magistrate No.II
Madurantakam